# திருமலைத்தீபம்

## THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு


நம்பிக்கை ஆண்டு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

பங்குனி ~ சித்திரை இதழ் ~ 2013. ஆரம்பம் 15~மாசி~2013. மறைக்கல்வி நடுநிலையம்,டொக்கியாட் வீதி, திருகோணமலை. தீபம்~01, சுடர்~02. விலை~20/=


Email:-catetcota@gmail.com

TP:-026 2221022,0779797230


"எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்" (லூக்கா 17:05)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தோவியம்

## எமக்கொரு திருத்தந்தை (We have a Pope)

குழப்பமும், குளறுபடியும், சிக்கலும் நிறைந்த மூன்றாம் நான்காம் மாதங்கள் எம்மை சந்தித்து விடைபெறுகிறது. ஒருபுறம் ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் இராஜினாமா, இன்னொரு பக்கம் அடுத்து வரும் திருத்தந்தை எந்தக் கண்டத்தைச் சார்ந்தவராய் இருப்பார்,என்ன மாற்றம் திருச்சபையில் ஏற்படும் என்று எதிர்பார்த்த ஒரு மாதம். மேலும் எம் நாட்டில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல, பௌத்த மத தீவிர வாதிகளால் (பொது பல்சேன அமைப்பு) முஸ்லீம் சமூகத்திற் கெதிராக கொண்டு வந்த ஹலால் பிரச்சனை ஓரளவு முடிவுக்கு வந்துள்ளது, ஆனால் நாளாந்த பத்திரிகை களை வாசிக்கும் போது இந்த முடிவினை பல முஸ்லீம் அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை போல் தெரிகிறது!.மழைவிட்டாலும் துவானம் விடாதது போல, இன்னும் முஸ்லீம் சமூகம் பல பிரச்சனைகளை எதிர்நோக்கும் போல் அறிகுறி தெரிகிறது. காலம் பதில் சொல்லும் நீதி நிலைக் கட்டும்.

கடந்த 4.2.2013 வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் திருமலையில், இலங்கையின் 65வது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. இதை முழு இலங்கையும் அறிந்ததே, எமக்கும் பெருமைதான். ஆனால் எம்மவருள் ஒரு சிலர் சுதந்திரமாக பெருமூச்சு கூட விடயிலாத சுதந்திரம் நமக்கெதற்கு என்று, இதை ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்த வர்கள் அனேகர். திருமலை மாவட்டத்தில் சம்பூர் மக்கள் படும் அவதி, அல்லல் எல்லாவற்றையும் அறிந்து.தம் மக்கள் புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையில், உண்மையான சுதந்திரத்தை கொண் டாடி முடித்துள்ளோமா என்று இலங்கை அரசாங்கம் தம் மனச்சாட்சியை அலசிப் பார்க்கட்டும். தம் சொந்த நாட்டில் தம்மக்கள் புறக்கணிக்கப்படும் நிலை எந்த சமூகத்திற்கும் வரக்கூடாது. தந்தை செல்வா சொன்னது போல் "தமிழர்களை கடவுள் தான் காப்பற்ற வேண்டும்."

1.2 பில்லியன் சனத்தொகை கொண்ட கத்தோலிக்க திருச்சபை மகிழ்ச்சியுறும் வண்ணம், கடந்த 13.3.2013 ஆர்ஜென்டீனா நாட்டைச் சேர்ந்த கர்தினால் ஜோர்ஜ் மரியோ பேர்கோலியோ, தூய பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வைப் பின்பற்றியவராக, தம் பெயரை பிரான்சிஸ் திருத்தந்தை என மாற்றி யுள்ளார். இயேசுசபையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் திருத்தந்தையும், அமெரிக்க கண்டங்களின் முதல் திருத்தந்தையும், பிரான்சிஸ் என்ற பெயர் கொண்ட முதல் திருத்தந்தையுமாவார். தெரிவு செய்யப்பட்ட எமது 266" திருத்தந்தையை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா இவ்வாறு கூறுகிறார். "ஏழைகளின், ஒடுக்கப்பட்டவர்களின் தலைவர் ("Champion of the poor") என்கிறார்.

தன்னகத்தே மூன்று "முதல் முதல்" என்ற சாதனைக்கு சொந்தக்காரராகிய நம் திருத்தந்தை, அழிந்து போகும் உலகத்திலே ஆத்துமாவை ஆதாய மாக்கும், நீதிக்கு குரல் கொடுக்கும் முதல்வராக, தலைவராக, இருக்க ஆவியானவர் என்றும் இவரை வழிநடத்தட்டும். We love you pope. இவர் ஒரு எளிமையான வாழ்க்கை வாழ்ந்த ஒருவரும் ஆவார். எம் திருத்தந்தை பிரான்சிஸ் ஆவியானவரால் அற்புத மாய் வழி நடத்தப்பட மீண்டும் எம் ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

எமது ஓய்வுபெற்ற திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் இறுதியாக கூறிய வார்த்தைகளை நினைவிற்கொள்வோம். திருச்சபை எனும் படகில் இயேசு இருப்பதனால் அது ஒருபோதும் அழிந்து போகாது. எனவே இந்த இயேசு நம் வாழ்வின் மையமாக இருக்கட்டும் என்றார். நாமே திருச்சபை, கிறிஸ்துவின் திரு உடல், இதை உணர்ந்திடுவோம், இணைந்திடுவோம், நம்பிக்கையுடன் ஓர் உடலாய் செயற்படுவோம்.

"habemus papam"
சாவை வென்றவர் எம் ஜீவன் ஆனார்
"happy easter"

அருட்பணி செ. மதுராங்கன். குருஸ்
ஆசிரியர்.

# ஆசியுரை

## திருமலைத் தீபம் முதல் வெளியீடு



திருமலை மறைமாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அனைத்து நற்செய்தி அறிவிப்புப் பணிகளின் ஊடகமாய்த் திகழப்போகும் 'திருமலைத் தீபத்தின்' முதல் வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமை அடைகிறேன்.

மழைக்கு முளைத்த காளான்போல் இன்று பல இடங்களில் பலரும் பலவிதமான நோக்கங்களுடன் நாளாந்த, வாராந்த, மாதாந்த பத்திரிகைகளையும் ஆரம்பிக்கின்றனர். எவ்வளவு வேகமாகத் தொடங்குகின்றதோ அதைவிட வேகமாக செயலிழந்து, ஆர்வமிழந்து, மறைந்து விடுவதும் உண்டு. ஒரு சில பத்திரிகைகளோ வெள்ளிவிழா, பொன்விழா, நூற்றாண்டு களையும் கொண்டாடி வீறுநடை போடுகின்றன.

அத்தகையதோர் உயர்ந்த இலட்சியத்தை இலக்காக் கொண்டு 'திருமலைத் தீபம்' ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஆசிப்பதுடன், இப்பத்திரிகை திருமலை மறைமாவட்டத்திற்கு மட்டும் ஒளி பரப்பாமல், பாரெல்லாம் அதன் சுடர் உயர்ந்திட வாழ்த்தி நிற்கின்றேன்.

ஊடகங்களின் வளர்ச்சி அபரிதமான வளர்ச்சிப்போக்கை எட்டி நிற்கின்றது. புதியதொரு கலாச்சாரம் உருவாகி வருவதை இவ்வுலகு காண்கிறது. வளர்ந்து வரும் இன்றைய உலகில் தொடர்புக் கருவிகளின் பணி மிகவும் முக்கியமானதாகும். விசேடமாக நற்செய்தி விழுமியங்களைப் பரப்பும் வண்ணம் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். வானொலிக்கு அடுத்து கத்தோலிக்கப்பதிப் பகங்களும் செய்தி மையங்களும் சரியான செய்திகளைத் தூவி சமயக் கல்வியையும் பயிற்சியையும் தலத்திருச்சபைக்கும் நாடு முழுவதற்கும் வழங்கலாம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அறைகூவலுக்கேற்ப "கிறீஸ்தவ உருவாக்கத்திற்கும் நிறைவாழ்வுப் பணிக்கும் தேவையான அல்லது பயனுள்ள எல்லாக் கருவிகளையும் பயன் படுத்துவதும் உடமையாகக் கொண்டிருப்பதும் திருச்சபையின் பிறப்புரிமையாகும்" (சமூகத் தொடர்புகள் - 03).

காலத்தின் அத்தியாவசியத் தேவையாக உள்ள 'திருமலைத் தீபம்' வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், அதன்வழி திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப்பணி நாற்றிசைகளுக்கும் பரவி இயேசுவின் கனவாகிய இறையரசு விரைவில் வளர்ந்திட பிரார்த்திக்கிறேன்.

அதி. வண. கலாநிதி. ஜோசப் பொன்னையா
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

# பாதர் சொல்லும் கதை



தண்ணீர்ப் பஞ்சம் நிலவும் கடும் கோடைக்காலம். வேகா வெயிலில் சமையல் வேலை செய்துவிட்டு வந்த களைப்பில் வீட்டுத்திண்ணையில் படுத்திருக்கிறாள் அந்தப்பாட்டி.

திடீரென்று வானில் கறுப்பு மேகங்கள் சூழ்ந்துகொண்டு இடிஇடித்து மழை கொட்ட ஆரம்பித்தது. பாட்டி பரபரப்பானாள். பேத்தியைப் பார்த்து அலறினாள். 'அடியே... எவ்வளவு தண்ணீர் வீணாப்போகுது... சமையல் கட்டில் இருக்கிற அண்டாவைத் தொட்டி முற்றத்துல கொண்டுவந்து வெச்சா எம்புட்டு தண்ணி கிடைக்கும்... போடி என் ராசாத்தி..." என்று கெஞ்சினாள்.

வேலையைவிட விளையாட்டு முக்கியம் என்கிற வயசு பேத்திக்கு... 'போ... பாட்டி... நான் வேலை செய்யமாட்டேன்" என்று மறுத்தாள் பேத்தி. 'அடியே... அடுக்களையில இருக்கிற பாத்திரத்தை அப்படியே கொணாந்து தொட்டி முற்றத்தில் வைக்கிறது பெரிய வேலையா? உன் வயசில நான் எம்புட்டு வேலை பாத்திருப்பேன்... இப்ப முடியலை போடி... போய் அண்டாவைக் கொணாந்து அப்படியே வையுடி..." என்று உத்தரவிட்டாள்.

வேண்டாவெறுப்பாக ஓடிப்போய் அந்த வேலையைச் செய்துவிட்டுத் திரும்பி வந்தாள் பேத்தி. அரைமணி நேரம் அடைமழை கொட்டியது. இந்நேரம் அண்டா நிரம்பி இருக்கும் என்ற ஆனந்த வெள்ளத்தில் நீந்தியபடி திண்ணையைவிட்டுத் தொட்டி முற்றத்துக்குப் போன பாட்டிக்குப் பகீர் என்றது! அண்டாவில் ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை. ஏன்?

'அப்படியே கொண்டுவந்து தொட்டி முற்றத்தில் வை" என்ற பாட்டி வாக்கை வேதவாக்காக எடுத்துக் கொண்டு, கழுவிக் கவிழ்த்து வைத்திருந்த அண்டாவை கவிழ்த்தவண்ணமே மழையில் வைத்துவிட்டாள் பேத்தி!

மழை என்னவோ வஞ்சனையின்றிதான் பெய்தது! பாத்திரம்தான் கவிழ்ந்துகொண்டு தண்ணீரை ஏந்த மறுத்துவிட்டது.

கடவுள் அருளும் அப்படித்தான். அது பொதுவாகவே கொட்டுகிறது. மனத்தைக் கவிழ்த்து வைத்தவர்கள் அதில் ஒரு சொட்டுக்கூட ஏந்துவதில்லை... திறந்த மனத்தோடு பிரபஞ்சத்துடன் தொடர்பு வைத்துக்கொண்டால் பஞ்சபூதங்களும் நமக்குச் சாதகமானவையே " இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன்.அவர்களும் உணவு அருந்துவார்கள் (தி.வெளி3:20). நம் இயேசு நமக்கு தேவையான அருளை ஒவ்வொரு நாளும் பொழிகிறார். நாம் அவர் தரும் அருளைப் பெற்றுக்கொள்ள திறந்த பாத்திரமா? அல்லது மூடிய பாத்திரமா?

Fr.மது

(நன்றி மனசே நீ ஒரு மந்திரச்சாவி புத்தகம்)

## திருமலை மறைமாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட திருப்பாலர்சபை நிதி - 2013

| | பங்கு | | பணம் |
|---|---|---|---|
| 01 | உவர்மலை | – | 10,176.00 |
| 02 | பேராலயம் | – | 10,000.00 |
| 03 | பாலையூற்று | – | 10,000.00 |
| 04 | நிலாவெளி | – | 5,000.00 |
| 05 | குவாடலூப்பே | – | 4,270.00 |
| 06 | இருதயபுரம்(மூதூர்) | – | 3,500.00 |
| 07 | அலஸ்தோட்டம் | – | 2,700.00 |
| 08 | சீனன்குடா | – | 2,500.00 |
| 09 | மூதூர் | – | 1,800.00 |
| 10 | கந்தளாய் | – | 800.00 |
| 11 | கன்னியா | – | 800.00 |
| 12 | சாம்பல்தீவு | – | 400.00 |
| 13 | தம்பலகாமம் | – | 400.00 |
| | | = | 52.346.00 |



தகவல் :: ஆயர் இல்லம்
திருமலை

## திருகோணமலை பிராந்திய தூய வின்சன் டீ பவுல் சபை மறைமாவட்ட சபையாக தரம் உயர்வு

திருகோணமலை தனி மறைமாவட்டமாக தனித்துவம் பெற்று இயங்கி வரும் நிலையில் திருகோணமலை பிராந்திய தூய வின்சன் டீ பவுல் சபை மறைமாவட்ட சபையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

திருகோணமலை தூய மரியாள் பேராலய கலாச்சார மண்டபத்தில், 27.11.2012 அன்று பிராந்திய சபையின் அமர்வில் கலந்து கொண்ட எமது மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி J.கிங்ஸ்லி சுவாம் பிள்ளை ஆண்டகை இதனை உத்தியோக பூர்வமாக அறிவித்தார். ஆயரின் புதிய நியமனத்திற்கமைய மூதூர் பங்குத்தந்தை அருட்பணி யூஜின் போல் ஜொனத்தன் அவர்கள் மறைமாவட்ட சபையின் ஆன்மீக இயக்குனர் பணிப்பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டார்.

தகவல் :- G.அல்பேட்

### நகைச்சுவை

மனைவி : அந்த பிச்சைக்காரனுக்கு திமிரு அதிகமாயிருச்சு
கணவன் : எப்படி சொல்றே?
மனைவி : சாப்பிட்டுவிட்டு சமைப்பது எப்படி?ங்கிற புத்தகத்தை கொடுத்துட்டு இனியாவது ருசியா சமைங்கன்னு சொல்லிட்டுப் போறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையாண்டு விஷேடபகுதி

## விடுதலை தரும் சிலுவை



**"அவர்கள் அவரை ஏளனம் செய்து சாட்டையால் அடித்து சிலுவையில் அறையும்படி பிறஇனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்". (மத் 20:19)** இயேசு ஆண்டவருக்கு யூத மதத்தலைவர்களும், யூத சமூகமும் கொடுத்த சிலுவைதான் இயேசு உயிர்த்தெழவும். நாம் அனைவரும் பாவத்திலிருந்து விடுதலை அடைந்து கடவுளோடு ஒப்புரவு கொண்டு வாழவும் வழி அமைத்துத் தந்தது. இயேசு இரட்சகர் சிலுவை சுமந்ததால்தான், சிலுவையில் தொங்கி உயிர் நீத்ததால் தான், கசையடிபட்டதால்தான் இன்று நானும் நீங்களும் முழு மீட்பைப் பெற்றிருக்கின்றோம். சிலுவை மரணத்தின் வழியாய் இயேசு ஆண்டவர் முழு உலகத்தின் பாவத்தையும் சிலுவையின் இரத்தத்தால் கழுவி விடுதலை வாழ்வு நமக்குக் கொடுத்துள்ளார். இதைத்தான் தூய பவுல் இவ்வாறு கூறுகின்றார். **"கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள் வளத்திற்கேற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார். இம் மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மன்னிப்புப் பெறுகின்றோம்". (எபே 1:7)** அதுமட்டுமல்ல நம்முடைய தனிப்பட்ட பாவங்கள் நம் தலை முறையினரின் பாவங்கள், சாபங்கள் எல்லாவற்றையும் இயேசு ஆண்டவர் கல்வாரி சிலுவையில் ஆணி அடித்து அறவே ஒழித்து விட்டார்.

### சிலுவை ஒப்புரவாக்குகின்றது

**"நமக்கு எதிரான ஒப்பந்த விதிகள் பல கொண்ட கடன் பத்திரத்தை அவர் சிலுவையில் வைத்து ஆணி அடித்து அறவே ஒழித்து விட்டார்." (கொலோ 2:14)** சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் கடவுளை விட்டு பிரிந்திருந்த அனைத்தையும் இயேசுக்கிறீஸ்துவின் வழியாய் கடவுள் தம்மோடு ஒப்புரவாக்கினார். "சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்." (கொலோ 1:20) ஆகையால் தொடக்கத்தில் ஏதேன் தோட்டத்தின் மரத்தில் பாம்பு வடிவத்தில் அலகை (ஆதாமையும், ஏவாளையும்) ஏமாற்றி முழு உலகத்தையும் பாவத்தில் வீழ்த்தியது. அந்த ஒரு மரத்தால் [**"அந்த மரம் உண்பதற்கு சுவையானதாகவும், கண்களுக்கு களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு பெண் அதன் பழத்தை பறித்து உண்டாள். அதைத் தன்னுடன் இருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள் அவனும் உண்டான்." (தொ.நூ3:6)** ] உலகத்திற்கும் மனுக்குலத்திற்கும் பாவமும்,சாபமும், தண்டனைத் தீர்ப்பும் வந்தது. அதே போல நம் ஆண்டவர் இயேசுக் கிறீஸ்துவின் சிலுவைச்சாவினால் முழு மனிதனுக்கும் முழு உலகத்திற்கும் பாவமன்னிப்பும், விடுதலை வாழ்வும், ஆசீர்வாதமும், ஆறுதலும், மகிழ்ச்சியும், உயிர்ப்பும் கிடைத்தது. **"நாம் கடவுளுக்குப் பகைவர்களாய் இருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப் பட்டுள்ளோம். அப்படியானால் ஒப்புரவாக்கப் பட்டுள்ள நாம் வாழும் அவர் மகன் வழியாக மீட்கப்படுவோம் என மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ". (உரோ 5:10)** எனவே இயேசு ஆண்டவருக்கு சிலுவைச் சாவு மகிமையைக் கொடுத்தது. சிலுவை வழியாய் நமக்கு உயிர்ப்புக் கிடைத்தது.

### சிலுவை நம் வாழ்வாகின்றது

இன்று நாம் வாழும் இந்தப் பூமியில் பலவிதமான கொடூரமான சிலுவைகளை சுமக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றோம், கட்டாயப்படுத்தப்படுகின்றோம். இதனால்நமக்கு ஆண்டவர் மேல் வெறுப்பு மனநிலை தோன்றுகின்றது. அயலவரோடு ஒப்புரவு கொண்டு வாழ விருப்பமில்லை. கடவுள் அச்சம் இல்லாமல் போகின்றது. மற்ற மனிதர்களை நாம் மதித்து அன்பு செய்து ஏற்றுக்கொண்டு வாழ எம் இதயத்தில் விருப்பமில்லாத ஒரு கொள்கை நம்மில் வளர்ந்து வருகிறது. தீராத நோய், பிணிகளின் அழுத்தம், மனக்குழப்பம், பொருளாதார கஸ்டங்கள், வேலையில்லாப் பிரச்சினை, தொடர்ச்சியான தோல்விகளும் அவமானங்களும், வறுமை, கண்ணீர், மனக்காயங்கள், சமூகம் நம்மீது திணிக்கும் குற்றச்சாட்டுக்கள் என்று தீர்வு காணப் படாத பல சிலுவைகளால் நாம் இன்று அழுத்தப்பட்டு வேதனைக்குள்ளாகி சோர்ந்து போயுள்ளோம். இவைகள் என்ன தான் நடந்தாலும் கிறீஸ்துவின் அன்பிலிருந்து நம்மை எதுவுமே பிரிக்கவே முடியாது. இது தான் பவுலின் நம்பிக்கையும் நமது நம்பிக்கையும். **"கிறீஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப்பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? எது தான் நம்மைப்பிரிக்க முடியும்?" (உரோ 8:35) நம்மை எதுவுமே ஒன்றும் செய்யமுடியாது "என் அருள் உனக்குப் போதும் வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்." (2கொரி 12:9)** அவருடைய கல்வாரி சிலுவையின் இரத்தத்தால் நாம் ஒவ்வொருவரும் விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளோம். நாம் எமக்குச் சொந்தமானவர்கள் அல்ல. இயேசுகிறிஸ்துவுக்கே சொந்தமானவர்கள் **"கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேருங்கள்." (1கொரி 6:20) "உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவிக்க கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டதல்ல மாறாக மாசு மறுவற்ற ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறீஸ்துவின் உயர் மதிப்புள்ள இரத்தமாகும்." (1பேது 01:18-19) "எனவே நாம் கிறீஸ்துவுக்குச் சொந்தமானவர்கள். ஆனால் நீங்கள் கிறீஸ்துவுக்குரியவர்கள் கிறீஸ்து கடவுளுக்குரியவர்."(1கொரி 03:23)**

### சிலுவை நம் பெருமையாகின்றது

எனவே நம் வாழ்வில் எத்தனை புயல்கள் வீசினாலும், அலகையின் சோதனைகள் வந்தாலும், அரசியல்வாதிகள், ஆட்சியாளர்களின் தடைகள் வந்தாலும் நாம் கலங்க வேண்டியதில்லை **"இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்." (மத் 28:20).** நம்முடைய சிலுவைகளை ஏற்றுக் கொள்வோம். நம்முடைய துன்பங்களுக்காக இயேசுவுக்கு நன்றி சொல்வோம். **"நமக்கு வரும் சிலுவைகள் தான் நமக்கு வல்லமையும், பெருமையும் மீட்பும்". (கலா 6:04)** என்பதை இயேசுக்கிறீஸ்துவின் சிலுவையின் பாடுகள் வழியாக உணர்ந்து கொள்வோம். சிலுவைகளை விரும்பிச் சுமப்போம் ஆண்டவர் இயேசுவுக்காய்! அப்பொழுது அவரது மகிமை எம் வாழ்வில் நிறைவாய் வெளிப்படும். **"சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகின்ற வர்களுக்கு மடமையே ஆனால் மீட்புப்பெறுகின்ற நமக்கோ அது கடவுளின் வல்லமை"** (1கொரி 1:18). எப்பொழுதும் இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிடுவோம். அவரே நம் வாழ்வில் மீட்பர் என்பதை உறுதியாய் நம்புவோம். **நம் ஒவ்வொருவருக்கும் உண்மையான மனமாற்றத்தையும், பாவமன்னிப்பையும், விடுதலை வாழ்வையும் இயேசு தம் திருத்தூதர்களுக்கு கொடுத்த பரிசுத்த ஆவியையும், மெய்யான அமைதியையும் எம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் படி உங்கள் யாவருக்குமாய் தூயஆவியின் வல்லமையோடு வாஞ்சித்து ஜெபிக்கின்றேன். "உங்களுக்கு அமைதி உரித்தாகுக." (யோவா 20:21). "இதோ என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன்" (லூக் 24:49)**

**அருட்பணி I.யூட்சர்வானந்தன்**
**பங்குத்தந்தை**

## உயிர்த்த ஆண்டவரைக் கண்டவருள் மூவர்

யோவான் நற்செய்தியின் முடிவில் உயிர்த்த நம் ஆண்டவர் இயேசுவைச் சந்தித்த **1.மகதலா மரியா 2. தோமா 3. பேதுரு** ஆகியோரின் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்வுகள் சொல்லப்பட்டுள்ளன. என்ன நோக்கத்திற்காக யோவான் இவற்றைச் சொன்னார்? இயேசு உயிர்த்தார் என்பதை நிரூபிப்பதற்காகவா? அல்லது அதற்கும் மேலாக உயிர்ப்பின் அனுபவத்தைச் சுட்டிக்காட்டும் குறியீடுகளா இவை? இந்த அனுபவங்கள் இந்தக் கதாப்பாத்திரங்களில் ஏற்படுத்திய மாற்றங்கள் என்னென்ன? அவை அவர்களுக்கு மட்டும்தானா? அன்றேல் அவை எல்லா காலத்திற்கும் எல்லா இடங்களிலும் வாழும் எல்லா மனிதர்களுக்கும் ஏதாவது சொல்கின்றனவா?.... இந்த கேள்விகளுக்கு யோவானிடம் பதில் இருக்கிறது.

**"இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும் நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப் பெற்றுள்ளன" (யோவான் 20:31)**

**முதலாவதாக,** இந்த அனுபவங்கள் நாம் உயிர்த்த ஆண்டவரை எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் சந்திக்க இயலும் என்பதை நினைவு படுத்துகிறது. இந்த நிகழ்வுகள் இயேசு கோவிலிலோ தொழுகைக்கூடத்திலோ அல்லது அன்றைய யூதர்கள் புனிதமான இடங்கள் என்று கருதிய இடங்களிலோ நிகழ்ந்தவை அல்ல. மாறாக 1.வாழ்க்கையே முடிந்துபோனது, மூடப் பட்டது, மண்ணில் புதைக்கப்பட்டது. இனி ஒன்றுமே இல்லை என்று சொல்லப் படுகின்ற பிணங்கள் அடக்கம் செய்யப் பட்டிருகின்ற கல்லறையில் நடந்தவை. 2.இன்பமும், துன்பமும், நிறைந்த அழுகையும், ஆனந்தமும் நிறைந்த வீட்டில் நடந்தவை. 3.அலையோடும், புயலோடும், கடலோடும், விளையாடும் கடற்கரையில் நிகழ்ந்தவை.

இந்நிகழ்வுகள் அனைத்தும் உயிர்த்த இயேசுவின் பிரசன்னம் 1. ஆஸ்தமன இடத்தில் 2. அன்றாட வாழ்விடத்தில் 03. வணிகம் புளங்குகிற இடத்தில் வழிந்தோடியதாகக் காட்டுகின்றன. இது நம்மை வியப்பில் அழத்துகிறது. அதாவது மனித வாழ்வு மலரும் சாதாரண இடங்களில் மாபரன் இயேசு உடனிருக்கிறார். எனும் உண்மையை வலியுறுத்துவதாய் விளங்குகிறது.

**"அவர் இங்கே இல்லை. உயிர்த்து விட்டார்".** என்னும் கூற்றும் உவமையாய்ப் பல செய்திகளைக் கொண்டு வருகிறது. அதாவது இறைவனின் உடனிருப்பு என்பதை பேராலயங்கள், ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்கள், திருத்தலங்கள் போன்றவற்றோடு மட்டுமோ அல்லது வழிபாடுகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆராதனைகள், சிறப்பு நாட்கள், சிறப்பு நேரங்கள் என்பவற்றோடு மட்டுமே உரிமை கொண்டாடும் ஒன்றாகச் சுருக்கிவிட முடியாது. உயிர்த்த ஆண்டவரைக் கட்டிப்போட முடியாது. உயிர்ப்பின் செய்தி என்பது வாழ்வைப் பற்றியது. அதிலும் நிறைவான முழுமையான வாழ்வைப் பற்றியது. வாழ்வின் ஒரு பகுதியை மட்டுமே பாதிக்கின்ற நிகழ்வு மட்டுமே சமய வாழ்வு என்று சொல்ல முடியாது இனி உயிர்ப்பின் ஒளியில் சமய வாழ்வு என்பது மனித வாழ்வின் அனைத்துத் தளங்களையும் பாதிக்கின்ற ஒன்றாக இருக்க வேண்டும். ஆகவே வாழ்விலிருந்து சமயத்தைத் தனியான ஒன்று என்று பிரிக்கக்கூடாது. **இது புனிதம், இது தீட்டு, என்று வெட்டிப்பார்க்கின்ற பார்வை கூடாது.** எல்லாமே இயேசுவின் உயிர்ப்பால் புனிதமாகுதல் வேண்டும்.

உயிர்த்த இயேசுவின் உடனிருப்பைக் **காலம், இடம், வழிபாடு,** என்று கட்டிப் போட்டுப் பார்க்கும் குறுகிய பார்வையி லிருந்து நாம் விடுதலை அடைதல் வேண்டும்.

**இரண்டாவதாக,** உயிர்த்த ஆண்டவர் தேவையில் இருக்கும் மக்களை அவர்களின் தேவைகளைச் சந்திப் பவராகக் காட்சி தருகிறார். என்பதை இந்நிகழ்வுகள் நினைப் பூட்டுகின்றன. **மகதலா மரியாவோ** துயரம் நிறைந்தவராய் இருந்தார். கண்களில் இருந்து வழிகின்ற நீர் அதைக் காட்டுகிறது. உள்ளம் உடைந்தவராய் இருந்தார். அவரது தேடலில் இருந்த ஏக்கமும் ஆர்வமும் அதைச் சுட்டுகிறது. ஆயினும் துணிவு நிறைந்த பெண்மணியாய் இருந்தார். **"நான் அவரை எடுத்துச் செல்வேன்"** என்னும் கூற்று இதை உறுதி செய்கிறது.

**தோமாவோ** இயேசுவைக் கண்டேன் என்று சொன்னவர்களின் கூற்றினை நம்ப இயலாத அவநம்பிக்கையுடையவாராய் இருந்தார். ஐயம் என்பது அவரது அறிவிலும் இதயத்திலும் ஆழமாய் ஊடுருவியிருந்தது.

**பேதுருவோ** தம் ஆளுமைக் குணத்திலும் தலைமைப் பண்பிலும் சீடத்துவ வாழ்விலும் பெருந் தோல்வியைச் சந்தித்துப் பின்வாங்கியிருக் கிறார். அவரது வீழ்ச்சியை மத்தேயு அழகுபடப் படம் பிடித்துக் காண்பித்தார். பாடுகளின் போது முதலில் **அனைவர் முன்னிலையிலும்** இயேசுவை மறுதலித்தார். **இரண்டாவது ஆணையிட்டு** மீண்டும் மறுதலித்தார். மூன்றாவது சபித்து ஆணையிட்டு மறுதலித்தார் (மத் 26: 69-75). இவ்வாறு தொடர்ந்து நடந்தேறிய தோல்வியின் உச்சமாக மீண்டும் பழைய வாழ்விற்குத் திரும்பினார் (யோவா 21:1-14).

ஆனால் உயிர்த்த ஆண்டவர் இயேசுவோ இவர்களை அவர்களின் தேவைகளின் விளிம்பில் சந்தித்தார் இந்த மூன்று சந்திப்புகளும் நமக்கு மனித வாழ்வின் மூன்று பெரும் பிரச்சனைகளை மனக்கண்முன் கொண்டு வருகின்றன. 1.**இறப்பு (Death) 2. ஐயம் (Doubt) 3.மனவருத்தம் (Despair).** மகதலா மரியாவைப் போன்றே நாமும் நம்முடைய அல்லது பிறருடைய வாழ்வில் தவிர்க்க முடியாத சாவை அல்லது சாவின் விளிம்பில் நிற்கும் தாங்கொண்ணா வலியைச் சந்திக்கின்றோம். தோமாவைப் போன்றே விசுவாசத் தளர்ச்சியும் ஐயமும் கொள்கிறோம். பேதுருவைப் போன்றே தவறுகளிலும் பாவங்களிலும் குற்றப்பழி உணர்வுகளிலும் சறுக்கல்களிலும் வீழ்ச்சியுறுகிறோம்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் சந்திக்கின்ற இந்த மூன்று பெரும் பிரச்சனைகளில் தன்னம்பிக்கை தகர்க்கப்படுகிறது. நாம் பல முயற்சிகளை எடுத்து நம்மைத் தற்காத்துக் கொள்ள முயலுகின்றோம். வாழ்வை முழுமையாய்த் தர வந்த வாழ்வின் நாயகன் ஆண்டவர் இயேசு **மகதலா மரியாவை, தோமாவை, பேதுருவை** இந்த மூன்று தேவைகளில் சந்திக்கிறார். இச்சந்திப்பின் பயனாக மகதலா மரியா நம்பிக்கையை கண்டடைந்தார். தோமா விசுவாசத்தைக் கண்டடைந்தார். பேதுரு மன்னிப்பைக் கண்டடைந்தார். இவர்கள் மூவரும் நம்பிக்கையை, விசுவாசத்தை, மன்னிப்பை தங்கள் வாழ்வில் அனுபவித்து மீண்டும் துய்த்துணர்ந்தனர். நாமும் அவ்வாறே துய்க்க முடியும் என்று யோவான் நற்செய்தியாளர் தன் நற்செய்தியில் நேர்மறையான கண்ணோட்டத்தில் முடித்து வைக்கின்றார்.

இதுவே நற்செய்தி, இதுவே நல்ல செய்தி. அதாவது இயேசு வாழ்கிறார் ஆம். இயேசு உயிர்த்தெழுந்து வாழ்கிறார். அவர் தம் மக்களை தாம் அன்பு செய்தவர்களை, ஏன் தமக்குத் துரோகம் செய்தவர்களையும் அவர்கள் வாழும் இடங்களில் அவர்களின் தேவையின் நேரங்களில் சந்திக்க விரும்புகிறார். நம்பிக்கை, விசுவாசம்,மன்னிப்பு ஆகியவற்றைத் தந்து நமக்குப் புது வாழ்வு வழங்கவும் விரும்புகிறார். புது வாய்ப்புத் தரவும் விளைகிறார். **"நான் ஆண்டவரைக் கண்டேன்"** என்று நாமும் முழங்குவோமா?.....

**நன்றி: விவிலிய விருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் குவலயம்

## பிள்ளைகளின் பூவுலகம்



'நான் குழந்தையாக இருந்தபோது குழந்தையைப் போல் பேசினேன்'' (1கொரி 12: 11). இப்படிக் கூறினார் தூய பவுல்.ஒரு குழந்தை எப்படிப் பேசும்? 'தத்துப்பித்து'' என்று எதையாவது உளறிக் கொண்டிருக்கும். அதை பெரும்பாலோர் வெறும் உளறலாகவே எண்ணிக் கொள்வார்கள். உண்மையில் இது வெறும் உளறல்தானா? இல்லை. இல்லவே இல்லை தசைகளின் இயக்கம்தான் பேச்சு என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். நாம் பேசும்போது உதடு - நாக்கு - அண்ணம் - குரல்வளை போன்றவற்றைக் கட்டுப்படுத்துகிற டசின் கணக்கான தசைகள் வேகமாக ஒன்றுசேர்ந்து செயற்படுகின்றன. குழந்தையிலே 'தத்துப்பித்து'' உளறல் மற்றவர்களைத் தன் பக்கம் இழுப்பதற்கான ஒரு வழியாக மட்டும் தெரிவதோடு, திருத்தமான பேச்சுக்கு அது மிக முக்கியமான ஒத்திகையாகவும் காணப்படுகின்றது.

எங்களது மழலைச் செல்வங்கள் 'தத்துப்பித்து'' எனப் பேசும்போது பெற்றோர் ஆகிய நாமும் சைகை காட்டி, புருவங்களை உயர்த்தி உணர்ச்சி பொங்க பேசுகின்றோம். இதிலும் ஒரு நன்மை உண்டு. பெற்றோராகிய நாம் இப்படிப் பேசும்போது தானும் எதையாவது சொல்ல வேண்டும் என்று குழந்தை தூண்டப்படுகின்றன. இவ்வாறான பேச்சுப் பரிமாற்றம்தான் மற்றவர்களோடு பேசுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ள அவனுக்குத் துணையாக நிற்கின்றது. இவ்வாறான திறன் அவனுடைய வாழ்நாள் முழுக்கப் பயன்படுகின்றது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு என்ன தேவை, எப்போது தேவை என்று பார்த்துக் கொள்வார்கள். பிள்ளை - குழந்தை அழுதால் போதும் உடனடியாக தாய் பாலூட்டுகிறாள். பிள்ளை சிணுங்கினால் தூக்கிச் சுமப்பாள், சமாதானப்படுத்துவாள். பிள்ளையை இப்படிக் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டியது முக்கியம். 'பிள்ளை பராமரிப்பாளர்'' என்ற முறையில் தங்களுக்குரிய பிரதான பொறுப்பை நிறைவேற்றுகிற ஒரு முக்கிய கடமை இதுவே (1தெச 2: 7). பிள்ளைப் பருவத்தில் பெற்றோரின் அரவணைப்பை தொடர்ச்சியாகப் பெறும் பிள்ளை.

'இந்த உலகத்தில் நான்தான் பிரதான ஆள்'' என்று கற்பனை செய்து கொள்கிறது. பெற்றோர் தமக்கு சேவை செய்யவே இருக்கிறார்கள் என்றும் நினைத்துக் கொள்கிறது. பிள்ளையின் மனதில் பதிந்துள்ள இந்த நினைவு தவறானது என்பதை உணர்த்துவது பெற்றோரின் கடமையாகும். பிள்ளையின் மனதில் பதிந்துவிட்ட உணர்வுக்கு முக்கிய காரணம், அதன் ஆரம்ப ஒன்றிரண்டு வருடங்கள். இதுவே பிள்ளையின் நடைமுறை உலகமாக இருந்துள்ளது! இக்கால கட்டத்தில் இந்த மாய உலகத்தைப் பெற்றோர் படைத்து விடுகின்றனர். இதனை மாற்றியமைக்க - சரிசெய்ய பெற்றோருக்குப் பின்னர், பதினாறுக்கு மேற்பட்ட வருடங்கள் தேவைப்படுகின்றன. இதில் வேடிக்கை என்ன வென்றால், இவ்வாறான எண்ணத்தை விதைப்பதும் பெற்றோர்தான். அதை பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைப்பதும் பெற்றோர்தான்.

கிட்டத்தட்ட இரண்டு வயதாகும் போது பிள்ளையின் இந்த கற்பனை உலகம் தரைமட்டமாகி விடுகிறது. அதுவரை பராமரிப்பாளராக இருந்த பெற்றோர் பிறகு கட்டளை பிறப்பிப்பவர்களாக - போதகர்களாக மாறிவிடுகின்றனர். இனிமேல், அவர்கள் சொற்படிதான் பிள்ளை நடக்க வேண்டும். பிள்ளை இழுத்த இழுப்பிற்கெல்லாம் பெற்றோர் வளைந்து கொடுக்க மாட்டார்கள். பிள்ளையின் மனநிலை - பிள்ளையின் இராச்சியம் பூச்சியம் ஆகி விடுகிறது. இதனால் இந்த புதிய மாற்றத்தை ஏற்றுக்கொள்வது அவனுக்கு கஷ்டமாகவே இருக்கிறது. இதனால் பிள்ளை கோபமடைந்து. தன் அதிகாரத்தைக் காப்பாற்ற - தக்க வைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றது. எப்படி...? ஏறக்குறைய இரண்டு வயதின்பின் பிள்ளையின் நடத்தையில் இயல்பு முறை தலைகீழாக மாறத் தொடங்குகிறது. தொட்டதற்கெல்லாம் கோபம்... ஆத்திரம்... அழுது புரண்டு ஆர்ப்பாட்டம் பண்ண ஆரம்பித்து விடுவார்கள். இதனைச் சமாளிப்பதற்கு பெற்றோருக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

இப்போது பிள்ளை வாயைத் திறந்தால்... 'மாட்டேன்,'' 'வேண்டாம்'' என்றே சொல்லத் தொடங்குவான், முரண்பட்ட உணர்ச்சிகளோடு பிள்ளையின் மன நிலை இருப்பதால் தன் மீதும் பெற்றோர் மீதும் கோபம் கோபமாக வரலாம். சில வேளைகளில் பெற்றோரிடமிருந்து தூர விலகிவிடவும் விரும்பலாம். அதேவேளை பெற்றோரின் பக்கமாக மிக நெருக்கமாகவும் விரும்பலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் குழம்பிப்போகும் பெற்றோர் ' பிள்ளையை எப்படி சமாளிப்பது'' என்று தெரியாமல் தவிப்பார்கள். பிள்ளைகள் ஏன் இப்படி நடந்துகொள்கிறார்கள்?

இந்தச் சமயத்தில் பிள்ளைகளின் வாழ்வில் அதிரடி மாற்றம் ஏற்படுகிறது. இதற்கு முன் பிள்ளை லேசாகச் சிணுங்கினாலே பெற்றோர் ஓடோடி வருவர். ஆனால் இனி மேல் அப்படியில்லை. பிள்ளையின் ஆட்சி கவிழ்ந்தது போலாகிவிடும். இனி அவனே தான் அனைத்துக் காரியங்களையும் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் போகப் போகப் புரிந்து கொள்கிறான். வேதாகமும் இதனையே வலியுறுத்துகிறது. **'பிள்ளைகளே! எல்லாவற்றிலும் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள்" (கொலோ 3: 20).**

இவ்வாறான - சிரமமான காலகட்டத்தில் பெற்றோர் தங்களுக்குரிய அதிகாரத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது. தங்களின் அதிகாரத்தில் உறுதியாக நிற்கும் அதே வேளையில் அன்போடும் நடந்து கொள்வது மிக அவசியம். இவ்வாறான நடவடிக்கை புதிய மாற்ற த்தை அவன் ஏற்றுக் கொள்வதற்குத் துணை செய்வதோடு, அவனது துரித வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு அவனைத் தயாராக்கி வழி நடத்தும் என்பதில் ஐயமில்லை.

**- தாபி -**

### இளைஞனே! நேரத்தை எடு

- உழைக்க நேரத்தை எடுத்துக்கொள் - அது வெற்றியின் விலை
- சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள் - அது சக்தியின் ஊற்று
- நல்லவை புரிய நேரத்தை எடுத்துக்கொள் - அது இன்பத்தின் பாதை
- படிக்க நேரத்தை எடுத்துக்கொள் - அது அறிவின் வாயில்
- திட்டம் தீட்ட நேரத்தை எடுத்துக்கொள் - அது சாதனைக்கு வழி
- அன்பு காட்ட நேரத்தை எடுத்துக்கொள் - அது இறைவனின் கொடை

**வேதாகமத்தை வாசிக்க நேரத்தை எடுத்துக்கொள் – அது வாழ்விற்கு விளக்கு**



## திருத்தந்தையின் திடீர் இராஜினாமாவும் அதன் அதிர்வலைகளும்

- Fr. நவாஜி -

முன்னுரை

கடந்த 11.02.2013 (திங்கட்கிழமை) உலக செய்தி ஊடகங்களினூடாக வெளியிடப்பட்ட செய்தியாகிய திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் (Pope Benedict XVI) தனது திருத்தந்தை பதவியிலிருந்து 28.02.2013 முதல் இராஜினாமா செய்துகொள்கிறார் என்பது அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்தது. அதிலும் விசேடமாக உலகமெங்கும் பரந்து வாழ்கின்ற 1.1 பில்லியன் கத்தோலிக்க மக்கள் அனைவருமே அச்செய்தி கிடைத்த நேரமுதல் அதிர்ச்சியில் உறைந்துள்ளதுடன் ஏன்? இப்படி என்கின்ற கேள்விகளையும் கேட்கத் தொடங்கியுள்ளார்கள். என்னிடத்திலும் பலர் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு ஏன் திருத்தந்தை இராஜினாமா செய்து கொண்டார்? அவ்வாறு அவர் செய்யலாமா? திருச்சபையில் அதற்கு இடமுண்டா? போன்ற பல கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைத் தேடினார்கள். அவ்வாறு தேடியமைக்கான காரணம் கடைசியாக கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் 600 ஆண்டுகளுக்கு முன்பே திருத்தந்தையொருவர் இராஜினாமா செய்துள்ளார். (அது குறித்த வரலாற்று விளக்கங்களை பின்னர் நோக்குவோம்). இதனடிப்படையில் இதுகுறித்த வரலாற்று விளக்கத்தை கொடுப்பதற்காகவே இக்கட்டுரை வரையப்படுகின்றது.

### திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் (Pope Benedict XVI)

முன்னாள் (தற்போதைய) திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்கள் கத்தோலிக்க திருமறையின் திருத்தந்தையாகவும், திருத்தூதர் பேதுருவின் 265வது வாரிசாகவும் 19.04.2005ல் அவரது 78வது வயதில் தெரிவு செய்யப்பட்டார். அவர் அந்த வயதில் தெரிவு செய்யப்பட்டபோது கடந்த 300 வருடங்களில் தெரிவு செய்யப்பட்ட வயதில் முதிர்ந்த திருத்தந்தையர் என்பது குறிப்பிடத்தக்கது. மறைந்த திருத்தந்தை 2ம் யோன் பவுல் அவர்களின் இடத்தினை நிரப்புவதற்காக கர்தினால்கள் குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட திருத்தந்தை கடந்த எட்டு வருடங்களாக திருச்சபையில் திருத்தந்தையாக சிறப்புப் பணியாற்றியுள்ளார். ஜேர்மனி நாட்டை பிறப்பிடமாகக் கொண்ட திருத்தந்தை, ஜோசப் ரட்சிங்கர் எனும் இயற்பெயரை கொண்டவர். மிகச் சிறந்ததொரு இறையியலாளர். திருச்சபையின் மிகவும் பிரபல்யமான மேதையாகிய இவரது இராஜினாமா அனைவரையும் அதிர்ச்சியில் உறையவைத்த நிகழ்வானது, ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

### திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் இராஜினாமா செய்திக் குறிப்பு

தனது இராஜினாமா குறித்து அவர் கூறிய வார்த்தைகள் பின்வருமாறு:- இறைவனின் பிரசன்னத்தில் தொடர்ச்சியாக எனது மனச்சாட்சியினை சோதித்தறிந்தன் விளைவாக, எனது முதிர்வயதின் காரணமாக (தற்போது 85வயது) எனது உடல்வலிமை திருத்தூதர் பேதுருவின் பணியினை தொடர்ந்தாற்று வதற்கு பொருத்தமானதாக இல்லையென்ற உறுதியான முடிவினை நான் மேற் கொள்கின்றேன். மேலும் திருத்தந்தையவர்கள் கூறுகையில் 'இப்பணியின் பிரதான ஆன்மீக இயல்பினை நன்கு அறிந்து கொண்டதன் பிரகாரம் இது வெறுமனே வார்த்தைகளாலோ, செயல் களாலோ அல்ல, அவ்வாறே குறைவான இறைவேண்டலினாலோ அல்லது துன்பங்க ளினாலோ முன்னெடுக்கப் பட முடியாது. இன்றைய உலகானது பல்வேறு தரப்பட்ட விரைவான மாற்றங்களுக்கும், விசுவாச வாழ்விற்கு தேவையான மிகவும் பொருத்தப்பாடுடைய வினாக்களாலும் நிலை குழம்பிப் போயுள்ளது. இத்தகைய பின்னணியில் தூய பேதுருவின் வாரிசாகவிருந்து வழி நடத்துவதற்கும், நற்செய்தியினை அறிவிப்பதற்கும் உடல் மற்றும் மனவலிமை மிகவும் பிரதானமானதாகும். எனது உடல் வலிமையானது கடந்த சில மாதங்களில் என்னில் குறைவடைந்து செல்வதை நான் உணர்வதோடு, என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியினை என்னால் செய்ய போதுமான அளவு சக்தி என்னிடமில்லை என்பதையும் அறிந்துள்ளேன். இக் காரணத்திற்காகவும், இப்பணியின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு கடந்த 19.04.2005ம் ஆண்டில் கர்தினால்கள் என்னிடம் ஒப்படைத்த உரோமை ஆயர், பேதுருவின் வாரிசு எனும் பணிப்பொறுப்பிலிருந்து முழுச்சுதந்திரத்துடன் (எதிர்வரும்) 28.02.2013 முதல் விலகிக்கொள்வதாக அறிவிக்கின்றேன் அத்துடன் அந்நேரமுதல் உரோமை ஆயரினதும், தூய பேதுருவினதும் ஆட்சிப் பீடங்கள் வெற்றிடமாகும். அதுமுதல் புதிய திருத்தந்தையை தெரிவுசெய்யும் குழு அதற்கான செயற்பாட்டில் ஈடுபடும்.

இறுதியாக அன்புச் சகோதரர்களே. எனது பணியில் மிகுந்த அர்ப்பணிப்புடனும். அன்புடனும் உதவிய அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு. எனது குறைபாடுகளுக்காக மன்னிப்பும் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வேளையில் எமது பரிசுத்த திருச்சபையின் முழுமுதற் மேய்ப்பராகிய இயேசுக் கிறிஸ்துவின் பராமரிப்பில் ஒப்படைப்பதுடன், தூய கன்னி மரியாள் கர்தினால்கள் குழுவினரை புதிய திருத்தந்தையை தெரிவு செய்வதில் தனது தாய்மைக்குரிய வாஞ்சையுடன் வழிநடத்திட அவரது பரிந்துரையும் வேண்டிடுவோம். என்னைப் பொறுத்த வரையில் எனது வருங்கால நாட்களை முழுமையாக கடவுளின் திருச்சபைக்காக செபவாழ்வினூடாக அர்ப்பணிக்க விரும்புகின்றேன்' என்று அவர் தமது இராஜினாமா செய்தியில் வெளியிட்டுள்ளார்.

### திருத்தந்தை ஒருவரின் இராஜினாமா பதவி விலகல் குறித்து திருச்சபையின் சட்டத் தொகுப்பு என்ன கூறுகிறது?

இச்செய்தி நமது செவிகளுக்கு எட்டிய நேரமுதல் எம்மில் பலரிடம் தோன்றியுள்ள கேள்வி திருத்தந்தையர்கள் இராஜினாமா அல்லது பதவி விலகல் செய்யலாமா? அது குறித்து திருச்சபை என்ன சொல்கின்றது? என்பதேயாகும். இதற்குக் காரணம் ஒருவர் தூய பேதுருவின் வாரிசாக திருச்சபையில் திருத்தந்தையாக தெரிவு செய்யப்படும்போது அவர் இறக்கும் வரையிலும் அப்பணிப் பொறுப்பில் இருப்பாரென்று திருச்சபை எதிர்பார்க்கின்றது. அதுகுறித்து கத்தோலிக்க திருச்சபையின் சட்டத்தொகுப்பு (The Code of Canon Law) 332/பிரிவு 2 தெளிவாக கற்பிப்பது யாதெனில்:

உரோமைத் தலைக்குரு தமது பணியைத் துறக்க நேரிட்டால் அதன் செல்லத்தக்க நிலைக்குப் பணித்துறப்பு தன்னுரிமையுடன் செய்யப்பட வேண்டும். மற்றும் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனாலும் அது எவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தேவையில்லை.

இங்கு மூன்று விடயங்கள் நோக்கத்தக்கவை:

'1. தமது சொந்த விருப்பத்தினாலும் அடுத்தவரின் வற்புறுத்தலின்றியும் நடைபெற வேண்டும்.

2. அது உடனடியாக பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

3. அப்பதவி விலகல் தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய அவசியம், தேவை கிடையாது.

தொடரும்...............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HAI COLLEAGUES

## 2013இல் இளைஞர்களே

இந்த வாரம் உங்களுக்கு புனிதர் ஒருவரைப் பற்றி கூறப் போகின்றேன். இந்த வரலாற்று உண்மையை வாசிக்கும் போது இந்தப் புனிதர் யாரென்று சற்று சிந்தியுங்கள். அது பாரசீக நாடு. அங்கு கிறீஸ்தவர்கள் அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். 424 ம் ஆண்டில் அப்தாஸ் எனும் ஆயர் ஒருவர் விவேகமின்றி பாரசீகருடைய தெய்வமாகிய அக்கினி தேவதையின் ஆலயத்தை நெருப்பால் எரித்து விட்டார். இதைக் கண்ட அரசன் கடுங் கோபங் கொண்டு **“எரிக்கப்பட்ட ஆலயத்தை ஆயர் திரும்பக் கட்டிக் கொடுக்க வேண்டும் இல்லாவிடில் கிறீஸ்தவர்களது கோவில்கள் அனைத்தையும் அழிப்பேன்.”** என்றான். ஆயர் கட்டிக்கொடுக்க மறுத்ததால் கிறீஸ்தவர்களின் கோவில்கள் அழிக்கப்பட்டன. ஆயர் கொல்லப்பட்டார். கொடிய கலாபனை தொடங்கியது. துன்புறுத்தப்பட்டவர்களில் ஒருவர் பெஞ்சமின். இவர் **திருத்தொண்டர்** என்ற பட்டம் பெற்றவர். இவரைச் சிறையில் அடைத்தார்கள். அரண்மனையில் இருந்தவர்களிடம் **“கிறீஸ்தவ வேதத்தைப்பற்றிப் பேசக்கூடாது”**. என்ற நிபந்தனையோடு பேரரசரின் பிரதிநிதி ஒருவர் இவருக்கு விடுதலையை பெற்றுக்கொடுத்தார். இவரோ **”கிறீஸ்துநாதரைப்பற்றி பேசுவது எனது கடமை. நான் மௌனமாக இருக்க முடியாது”**. என்று கூறினார். இவரைப் பிடித்து வதைத்துக் கொன்றார்கள்.

அன்பு இளைஞர்களே!
ஒவ்வொரு புனிதருடைய வாழ்வும் எமக்கு ஏதே ஓர் செய்தியைப் பெற்றுத் தருகின்றது. அதனை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். தூய பெஞ்சமின் இயேசுவின் மேல் அளவு கடந்த பற்றும் நம்பிக்கையும் வைத்திருந்தார். அதனால் தான் **“கிறீஸ்து நாதரைப்பற்றி பேசுவது எனது கடமை. நான் மௌனமாக இருக்க முடியாது”**. என்று கூறினார்.

**இன்றைய இளைஞர்களே**
இன்று நீங்கள் இயேசுவின் மட்டில் எவ்விதமான வாழ்க்கை வாழ்கின்றீர்கள்?. தற்போதைய இளைஞர்களில் அதிகமானோர் தங்களுடைய வாழ்க்கையைத் தொலைத் தொடர்புகளுக்குள் கொண்டு செல்வது கண்கூடு.



இறைவன் கொடுத்த ஆற்றலின் வெளிப்பாடாய் வெளிவந்துள்ள தொலைத் தொடர்புகள் இறைவனையே மறக்கச் செய்யுமென்றால் எதற்காக நவீன கண்டுபிடிப்புக்கள்? இறைவனைத் தேடுவது இன்றைய உங்களுக்கு சற்று கசப்பாகவே உள்ளது. ஆயினும் இயேசுவின் இளமைப்பருவ வாழ்வும் அவர் காண்பித்த முன்மாதிரிகையும் எமக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள் அல்லவா.

**அன்பு நண்பர்களே !**
கிறீஸ்தவர்களான நீங்கள் ஏதோ பிறந்தோம், ஏதோ வாழ்கின்றோம் என்றில்லாமல் ஒரு குறிக்கோளோடு வாழுங்கள். அழியாத ஆன்மாவைப் பெற்றுள்ள நீங்கள் அதனை அழிவின் பாதைக்குள் இட்டுச் செல்லலாமா? சற்று சிந்தியுங்கள். மேலே நீங்கள் வாசித்த தூய பெஞ்சமினின் வாழ்க்கையை விட சிறந்த உதாரணம் வேறு எது?

இது தவக்காலம் மனம்மாறுங்கள். மனந்திரும்புங்கள் என்றெல்லாம் நான் கூறவரவில்லை. உங்களைப் பற்றி ஒருவர் கரிசனையோடு இருக்கின்றார். எனவே அவரைப்பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள். காரணம் அவர் உங்கள் மேல் தாகம் கொண்டுள்ளார். உங்களைப்பற்றி ஓர் திட்டம் வைத்துள்ளார். நாம் இறைவனின் திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாது, ஆனாலும் இறைவனோடு சேர்ந்து நடக்கலாம். நடப்போம், நடக்க முயற்சி செய்வோம். உங்கள் ஒவ்வொருவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல் வாழ்துக்கள். உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் உயிர்ப்பின் சாயல் உருவாகட்டும்.

**உவர்மலை**
**க.கியூரி**

## மரம் புனிதமானது மனம் சகதியானது

பட்டமரம் மீதிலொரு
பச்சைமரம் வாடுதம்மா
தொட்டுத்தொழ
நோய்தீர்த்த
சுட்டுவிரல் ஓய்ந்தம்மா
கட்டுமரம் போலிருந்து
கரை சேர்க்க வந்தமகன்
நட்டநெடுஞ் சிலுவையிலே
நாதியற்றுத் தொங்குகிறான்

பட்டியிலே பூத்தெழுந்த
பானிலவுப் புதுவைரம்
ஒட்டியுடல் வாடிமுகம்
ஒளியிழந்து காணுதையோ!
கொட்டுமழைக் குளிர்மேகம்
கொலுவிருந்த கருணைவிழி
சொட்டுகின்ற குருதி மழை
பூமிதனைக் கழுவுதம்மா !

பொங்கியெழும் பேரலையை
பொல்லாத பெரும் புயலை
வெங்கொடிய நோய் நொடியை
வார்த்தைகளால் அடக்கியவன்
அங்கமெலாம் நொந்துபட
ஆணிகளும் முத்தமிட
தங்கமகன் சுமை தாங்கி
தனிமரமாய் ஆகிநின்றான்.

வெம்பருதித் தீச்சுடரில்
வற்றியிதழ் நாவரள
செம்பருத்திப் பூவுடலம்
சிதைவுண்டு பதைப்பெய்த
அம்புமொழி வார்த்தைகளோ
அடிநெஞ்சை ஊடுருவ
துன்பமெலாம் தாங்கியவன்
தாகத்தால் வாடிநின்றான்.

உச்சிமலைச் சிலுவையிலே
உயிர்தந்து உயிர்மீட்க
பச்சைரத்தம் பலிகொடுத்த
இரட்சணிய யாகமிது
பரிகாசச் சிலுவைமரம்
புனித மரம் ஆனதங்கே
சதிகார மனித மனம்
சகதியிலே மீண்டுமிங்கே

இ.ம.ஜெகதீசன் குரூஸ்
மூதூர்

## வாழ்த்துக்கள்

ஏந்தி வந்த கருத்துக்களை
எளிமையாக வாசித்தோம்
எழுதுகின்றேன் கவிதையொன்று
ஏற்றிடுவாய் நீ சுடர் விட்டு

இறையொழியை ஏற்றுக்கொண்டு
இனிமையாக கருத்தரித்து
இனமின்றி பேதமின்றி
இணைந்திடுவாய் திருமலை தீபமே.

கொண்டு வந்த செய்திகளுக்கு
கொடுக்கின்றோம் எம் மரியாதை
கொடையாக பொழிந்திடுவாய்
கோடான கருத்துக்களை

வாழ்த்துகின்றேன் மனமாற
வாழியவே எந் நாளும்
வழத்துடனே வெற்றிபெற
வந்திடுவாய் நீ திருமலை தீபமே.

சுகுணா அன்ரன்
சீனக்குடா.

## திருமலை தீபமே வருக

வாழ்வின் ஒளியாய்
வார்த்தையின் வடிவாய்
மக்கட்கு விடிவாய்
வருவாய் தீபமே

அக இருள் களைந்து
மனிதம் மலர்ந்திட
சிறப்புடன் வருக
திருமலை தீபமே

கற்றவர் பாமரர்
பேதம் நீக்கிட
பசுமையாய் வருவாய்
பலரும் ஒளிபெற

குறைகள் களைந்து
நிறைகள் மிளிர்ந்திட
குன்றின் மேல் விளக்காய்
குன்றாமல் ஒளிர்ந்திடு.

டெல்மா சடகோபன்
பேராலயம்


## எங்களோடு இணையுங்கள்

**திருகோணமலை சமூக தொடர்பு நிலையம் விடுக்கும் அழைப்பு**

எமது திருகோணமலை மறைமாவட்டத்தில் ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை இயல், இசை, நாடகம் இன்னும் பல வடிவங்களில் அறிவித்திட எங்களோடு இணையுங்கள். ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றுவது திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவர் மேலும் சுமத்தப்பட்ட பணியாகும்.

Join us, today.

“நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகானவை.”
- (உரோ 10:15)



**தொடர்புகளுக்கு:**
Fr. S.**மதுராங்கன் குரூஸ்,**
**இயக்குனர், சமூகத் தொடர்பு நிலையம்,**
**ஆயர் இல்லம், உவர்மலை,**

## அருட்தந்தை போல் றொபின்சனின் தந்தையவர்கள் இறைபதம் அடைந்தார்

இறைவன் மடியில்
04
.
02
.
2013



தாயின் மடியில்
08
.
06
.
1932

அமரர் திரு. போல் பர்னபாஸ்

எமது மறைமவாட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை போல் றொபின்சனின் தந்தை அமரர் திரு போல் பர்னபாஸ் தமது 81ம் வயதில் இறைபதம் அடைந்தார்.
இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவுகள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் திருமலைத் தீபம் தனது அனுதாபத்தை தெரிவித்து செபித்து நிற்கின்றது.

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்”
(யோவா 11:25)


## புனித நாட்டுப் பயணம்



**புனித நாட்டிற்கான 8நாள் அதிவிசேட திருப்பயணம் யோர்தான், எரிக்கோ, திபேரியா நாசரேத் கானா, பெத்லகேம், எருசலேம், சாக்கடல், பெத்தானியா இன்னும் பல இடங்கள்.**

**பயணக் கட்டணம், விமானக் கட்டணம், உணவு மற்றும் தங்குமிட வசதிகளை உள்ளடக்கியது 1,69,000.00 ரூபா**

**தொடர்பு: அருட்தந்தை செ. மதுராங்கன் குரூஸ்**
**திருமறைக்கல்வி நிலையம்**
**இல:297, டொக்கியாட் வீதி**
**திருகோணமலை.**

**தொடர்பு கொள்ள:** 077 9797230
Email : mathurangan croos@yahoo.com


## நம்பினால் நம்புங்கள் சுமிலஸ்




நன்றி : மன்னா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திபேறு பெற்ற மறைசாட்சி

# தேவசகாயம்பிள்ளை [1712-1752]



தொடர்ச்சி.........

**"கிறீஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றை யும் குப்பையாகக் கருதுகிறேன்" (பிலிப்பியர் 3:8)** என்ற சிந்தனையின் வழி தேவசகாயம் எல்லா எதிர்ப்புகளையும், பழிச்சொற்களையும், சாவுத் தண்டனையையும் ஏற்கத் தயாராகி விட்டார்.

இந்த அரசரவையில் கீறிஸ்துவராக நான்கு ஆண்டுகள் செவ்வனே பணி செய்தார். ஆனால் இவன் ஒரு கிறீஸ்தவனாக உயர்குலத்தோர் அடங்கிய அரசவையில் இருக்கக் கூடாது என்றும், போகப் போக நமது நாட்டையே கிறீஸ்துவைத் தழுவ வைத்து எல்லோரையும் கெடுத்து விடுவான் என்றும் அவர் மீது பிராமணர்கள் சீறி எழுந்தனர் அவர் மீது குற்றம் சாட்டி தண்டனை விதிக்க மார்த்தாண்டவர்மா மன்னரை ஏவினர்.

### *சிறைச்சாலையில் தேவசகாயம்பிள்ளை*

1749ம் ஆண்டு பிப்ரவரி 23ம் நாள் பத்மனாபபுரத்தில் கைது செய்யப்பட்டார். இவருடைய நண்பரான தேலனோய் அவருக்கு ஊக்கமூட்டும் சொற்களை பேசினார் என்று தந்தை புத்தாரியின் கையேடு குறிப்பிடுகிறது. கிறீஸ்துவின் பிரமாணிக்கமான போர் வீரர் என்பதைக்காட்ட இதோ நேரம் வந்துவிட்டது துணிச்சலுடன் போராட தேலனோய் ஊக்கம் கொடுத்தார். அதற்கு தேவசகாயம் தந்த பதில் கீறிஸ்துவுக்காக ஆயிரம் முறை சாகத்தயாராக இருக்கிறேனேயொழிய, ஒரு கோழையாக கிறீஸ்துவிடமிருந்து முகத்தை திருப்ப ஒரு நாளும் இசையமாட்டேன்

### *தேவசகாயம் பிள்ளையின் சிலுவைப் பாதை*

தேவசகாயம் பிள்ளையின் சிலுவைப் பாதை பத்மனாபபுரம் இருந்து ஆரல்வாய்மொழி காற்றடி மலை வரை அவர் நடந்து சென்ற நீண்ட பாதையாக இருந்தது. இந்த பயணம் சுமார்3 ஆண்டுகள் நீடித்தது. இந்த பயணத்தில் ஒரு பகுதி எருமையின் மேல் அவர் செய்த சவாரி எமன் ஏறும் வாகனம் என்று தமிழ் மக்கள் சொல்லும் ஒரு எருமை மீது அவரை ஏற்றி மக்கள் மிகுந்த வீதிகள் வழியாக அவரை இட்டுச் சென்றனர். இடுப்பைச் சுற்றி ஒரு சிறிய துணியை அணிந்தவராய் எருக்கம் பூ மாலை கழுத்தில் தொங்க இரு கைகளும் பின்புறம் கட்டப்பட்டு எருமை மேல் பின்பக்கம் நோக்கி அமர்ந்தவராக ஊர் ஊராக அவரைச் சுற்றி வரச்செய்து அவமானப்படுத்தினர். இதைக் கண்டு மக்கள் பயப்படுவார்கள் என்றும், கிறீஸ்தவத்தை விட்டுவிடுவார்கள்,என்றும் ஆட்சியாளர்கள் நினைத்தார்கள்.

ஆனால் தேவசகாயம் பிள்ளையின் மலர்ந்த முகத்தையும் ஜெபிக்கும் உதடுகளையும் கண்ட மக்கள் அவர்மேல் பாசமும் இரக்கமும் கொண்டனர் மக்கள் பயந்து ஓடுவார்கள் என்று நினைத்த அதிகாரிகளுக்கு ஏமாற்றமாய் இருந்தது அந்த ஏமாற்றம் கோபமாகமாறி தேவசகாயம் பிள்ளையை இன்னும் அதிக கொடூரமாக நடத்தச் செய்தது முட்கசையால் அவரை அடித்தனர், அவரது காயங்களில் குறிப்பாக கண்களில் மிளகாய் பொடியை தேய்த்தனர். அவமானப் பவனி பல நாட்கள் நீடித்தன. நெய்யாற்றங்கரை, நெடுமங்காடு, திருவனந்தபுரம் போன்ற பட்டணங்களின் ஆளுநரிடம் இவர் நிறுத்தப்பட்டு விசாரணை நடந்தது என்ற சிலர் கூறுகின்றனர்.

தொடரும்...........


## பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள், விளம்பரங்கள் திருமலைத் தீபத்தில் பிரசுரிப்பதற்கு

**கலர் படம்**

| | | | |
|---|---|---|---|
| 1 முழுப் பக்கம் | Full page | - | 10,000.00 ரூபா |
| ½ அரைப் பக்கம் | Half page | - | 5,000.00 ரூபா |
| 1/4 கால் பக்கம் | Quarter page | - | 2,500.00 ரூபா |

**கறுப்பு வெள்ளைப்படம்**

| | | | |
|---|---|---|---|
| 1 முழுப் பக்கம் | Full page | - | 5,000.00 ரூபா |
| ½ அரைப் பக்கம் | Half page | - | 2,500.00 ரூபா |
| 1/4 கால் பக்கம் | Quarter page | - | 1,500.00 ரூபா |

Ø நீங்கள் அனுப்பும் படங்கள் தெளிவான புகைப்படங்களாக இருக்க வேண்டும்.

Ø இவை அனுப்ப வேண்டிய முறை 6ம் மாதம் பிரசுரிப்பதென்றால் 5ம் மாதம் 10ம் திகதிக்கு முன்பு உங்கள் விபரங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்பதையும் அறியத் தருகின்றோம்.


Ø ஆக்கங்கள் அனுப்புபவர்கள் பங்குத்தந்தையின் கையொப்பத்துடன் அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**(ஆசிரியர்)**


## மாதம் ஒரு திருப்பாடல் (சங்கீதம்)

## திருப்பாடல் - I

## இருவழிகள்




**1. பின்னணியில்:** "நற்பேறு பெற்றவர்" (1: 1) என்று மனிதனை வாழ்த்தித் தொடங்கும் திருப்பாக்களின் தொகுப்பு, "ஆண்டவரைப் புகழ்ந்திடுக" (150: 6) என்னும் இறுதி இறைவாழ்த்து அழைப்போடு முடிவுறுகிறது. திருப்பாக்கள் அனைத்தின் முன்னுரையாகவும் அவற்றின் சுருக்கமாகவும் இப் பாடல் அமைந்துள்ளது. மங்களச் சொல்லோடு ("நற்பேறு பெற்றவர்") தொடங்கும் இம்முதல் திருப்பாவும் (1: 1), அதே மங்களச் சொல்லோடு ("நற்பேறு பெற்றோர்") முடிவுறும் இரண்டாம் திருப்பாவும் (2:12) ஒரு காலத்தில் ஒரே பாடலாயிருந்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

இயேசு கூறிய இடுக்கமான வாயில் அகன்ற வாயில் (மத் 7: 13-14), பாறைமேல் வீடு கட்டிய அறிவாளி - மணல் மீது வீடு கட்டிய அறிவிலி (மத் 12:24-27), நற்கனி தரும் மரம் - தீய கனி தரும் மரம் (மத் 12: 33-34) என்பன இம்மரபையே வலியுறுத்துகின்றன. பல் சமயங்களும் இதே பாணியையே பின்பற்றி, வாழ்வு-சாவு, ஒளி-இருள், நீதி-அநீதி, அறம்-மறம் என்ற இரு கோணங்களிலே மனித வாழ்வைக் கணிக்கின்றன.

பழைய ஏற்பாட்டு அறிவுரை அனைத்தின் சாரமாக இத்திருப்பா அமையினும், புதிய ஏற்பாட்டில் இயேசுவில் தான் இது முழுமைப் பொருள் பெறுகிறது. தந்தையின் திருவுளத்தையே (யோவா 4: 34), தந்தைக்கு உகந்தவற்றையே (யோவ 8: 29), தந்தைக்குரிய செயல்களையே (யோவா 10: 37-38), "தந்தையின் அலுவல்களையே" (லூக் 2:49) நிறைவேற்றிய இயேசுவே இத்திருப்பா ஏத்தும் "நற்பேறு பெற்றவர்" எனலாம். இவரே "ஆண்டவருக்குரிய திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறும்" (திபா 1: 2) புதிய ஏற்பாட்டு நேர்மையாளர்.

**2. பொருள் விளங்க:** 1. நற்பேறு பெற்றவர்: திருப்பாக்களில் 26 தடவை இச்சொற்றொடர் வருகிறது (காண். 2: 12, 42: 1, 84: 4, 94: 12, 112: 1, 128: 1) கிபி "அசெரெ" என்ற எபிரேய மூலச்சொல் வாழ்வின் அனைத்து நலன்களையும் குறிக்கும் இறைவனுக்கும் மனிதருக்கும் ஏற்புடைய ஒரு வாழ்வே பேறுபெற்ற வாழ்வு ஆகும் (காண். இயேசுவின் மலைப்பொழிவு: மத் 5: 2-12, லூக் 6: 20-23). பொல்லார், பாவிகள், இகழ்வார்: (காண்: எசா 57: 20, தொநூ13: 13, நீமொ 21: 24). இணையணி முறையிலே இம்மூன்று சொற்களும் பொதுவாக அனைத்துத் தீயோரையும் குறிக்கும்.

நடவாதவர், நில்லாதவர், அமராதவர்: படியமைப்பு இணையணி முறையிலே (stairlike parallelism) இம்மூன்று நிலைகளும் தீமையில் படிப்படியாக வளர்ந்து வீழ்ச்சியுறுவதைச் சுட்டலாம்.

**2. ஆண்டவரின் திருச்சட்டம்:** நற்பேறு பெற்றவர் யார் என்ற முதல் சொற்றொடரில் எதிர் மறையில் கூறியவர், இங்கு (1:2) நேர்முகமாக "ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்" என்று குறிப்பிடுகிறார். "ஆண்டவரின் திருச்சட்டம்" இங்கு "பொல்லாரின் சொல்" என்பதற்கு எதிர்மறையாக அமைகிறது. "தோரா" என்ற எபிரேயச் சொல் சட்டம் என்று மொழி பெயர்க்கப் படுகின்றது. எனினும் இச்சொல் இறைவனது வெளிப்பாடு, அவர் தந்துள்ள வாழ்க்கை நெறி, மற்றும் வழிமுறைகள் அனைத்தையும் சுட்டும். இது நம்மைப் பொறுப்புணர்வுக்கும், அதே வேளையில் விடுதலைக்கும் அழைத்து வழிநடத்துவது எனலாம். புதிய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தில் மறுவாசக முறைப்படி 'தோரா"வுக்கு அன்பு என்றும் பொருள் கொடுக்கலாம்.

**3. நீரோடையோரம் நடப்பட்ட மரம்:** இறைவனின் ஆசி இயற்கை வளங்கள் வழி வெளிப்படுவதை விவிலியம் பல இடங்களில் சுட்டுகிறது (காண். திபா 92: 12, எரே 7: 8, எசே 17: 5-10, 19: 10 முதலியன).

**4. பதரைப்போல் ஆவர்:** பயனற்றவர் ஆவர். முறத்தால் புடைத்துப் பதரை ஒதுக்குவது இறைத் தீர்ப்பை விளக்கும் விவிலியச் சித்திரம் (காண். திபா 35: 5, ஓசே 13: 3, எசா 17: 3, செப் 2: 2).

**5. நீதித்தீர்ப்பு:** இறுதிப் பொதுத்தீர்ப்பு அல்லது அன்றாடம் நம் செயல்களுக்கு இறைவன் (ஏன் நாமுமே) இடும் தீர்ப்பு ஆகும். இவ்வசனம் பதரின் நிலையைத் தீயோர் மேல் ஏற்றி. அவர்கள் நிலைத்து நில்லார், பதர் போல் காற்றோடு காற்றாய்ப் பறந்து மறைந்து ஒழிவர் என்று கூறுகிறது.

**6. கருத்தில் கொள்ளார்:** பாதுகாப்பார், வழிநடத்துவார், துணைநிற்பார், அன்பு செய்வார் எனப் பொருள்படும் (காண். திபா 31: 7, 139: 1-6, 144: 3, யோபு 103: 10, யோவா 10: 14-15).நெறி, வழி "தெரெக்"என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பு திருப்பாடல்களில் மட்டும் இச்சொல் 66 தடவைகள் பயன் படுத்தப்படுகிறது. 119 ஆம் திருப்பாடலில் 16 தடவையும், எசேக்கியேல் இறைவாக்கினரில் 107 தடவையும் இச்சொல் காணப்படுகிறது. ஆண்டவரது திட்டம், அவரது வழிநடத்தல் முதலியவற்றை இது குறிக்கும் (திபா 18: 21, 25:4,37: 34 முதலியன). அதே வேளையில், இது மனிதருடைய நல்ல, கெட்ட குணங்களையும் செயல்பாடு களையும் சுட்டும் (திபா 39: 1, 50: 23, 146:9). புதிய ஏற்பாட்டில் கடவுள் காட்டும் வழி முறைகள் (மத் 22: 16, லூக் 20:21) என்னும் பொருளிலும், கிறிஸ்துவரின் நடத்தை முறைகள் (1கொரி 12:31, பேது 2:2-21) என்னும் பொருளிலும், கிறீஸ்துவத்தை சுட்டும் பொருளிலும் (திப 9: 2,19:1, 22:4, 24:4) இச்சொல் பயன்படுத்தப்படுவதைக் காண்க.

**3. செபித்து வாழ:** நம் ஒவ்வொருவர் முன்னும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று நம்மை வாழ்வுக்கு இட்டுச் செல்வது. ஏனையது தீமைக்கும் சாவுக்கும் இழுத்துச் செல்வது (இச 30: 15-20, எரே 21: 8). ஒன்று வளரும் ஒளிபோன்றது. மற்றது அழிக்கும் இருள் போன்றது (நீமொ 4: 18-19). முதல் வழி ஒடுங்கியது, அதை நாடிச் செல்வோர் சிலரே. இரண்டாம் வழி பரந்தது. அது பலரை வலிய ஈர்ப்பது (மத் 7: 13-14). எவ்வழி செல்வோம் நாம்?

**நன்றி : திருப்பாடல் புத்தகம்**
(Fr..இராசா S.J)


**ஆசிரியர் குழு**

01. Fr.S.மதுராங்கன் குரூஸ் (மறைக்கல்வி நிலையம்)
02. திருமதி ஆஞ்சலின் சுப்பிரமணியம் (பேராலயம்)
03. செல்வன் கோ. மனோகரதாஸ் (குவாடலூப்பே)
04. செல்வி க.நவக்கியூரி (உவர்மலை)
05. திரு ஜி.அல்பேட் (பாலையூற்று)
06. செல்வி. ஜே.கிறிஸ்சாந்தா குரூஸ் (மறைக்கல்வி நிலையம்)
07. திரு. ம.இ.ஜெகதீசன் குரூஸ் (மூதூர்)
08. கணனி அமைப்பு செல்வி S.ரேனுஜா (மறைக்கல்வி நிலையம்)


## நகைச்சுவை

குற்றவாளி : என் மனைவியைப் புரிஞ்சுக்கவே முடியலை யுவர் ஆனர்

நீதிபதி : அதுக்கும் நீங்க இரண்டாவது கல்யாணம் செஞ்சுக்கிட்டதற்கும் என்ன சம்பந்தம்?

குற்றவாளி : ஒரு பொண்ணோட மனசு இன்னொரு பொண்ணுக்குத்தான் தெரியும்னு சொன்னாங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Good bye our dearest pope Benadict*

## 16ம் ஆசீர்வாதப்பரே உங்களுக்கு நன்றி



காலச்சக்கரத்தின் துரித சுழற்சியில் 600 வருடங்களின் பின்னர் வத்திக்கானில் மாற்றம் ஒன்று ஏற்பட்டடுள்ளது. உலக கத்தோலிக்க மக்களின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் (பெனடிக்ட்) வயது மூப்பு, உடல் நலக்குறைவு காரணமாக பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கிறார். எதிர்வரும் 28 ஆம் திகதி பாப்பரசர் உத்தியோக பூர்வமாகப் பதவி விலகுவதை வத்திக்கானும் உறுதிப்படுத்தியிருக் கிறது. இற்றைக்கு சுமார் 600 வருடங்களுக்க முன்பு பாப்பரசர் 12ஆவது கிரெகரி பதவியை இராஜினாமா செய்திருந்தார். மத ரீதியான அபிப்பிராய பேதத்தா லேயே அவர் இராஜினாமா செய்ய நேரிட்டது. ஆனால் தற்போதைய பாப்பரசர் 16 ஆம் ஆசீர்வாதப்பர் தனது சுய பிரக்ஞையின் பேரில் அதாவது, இறைவனுக்கு ஊழியம் செய்வதற்குத் தேவையான ஆரோக்கியம் இன்மை மற்றும் முதுமை காரணமாக பதவி விலகுவதாக அறிவித்திருக்கிறார். 2005 இல் பாப்பரசராகப் பதவியேற்ற ஆசீர்வாதப்பர் 8 ஆண்டுகளின் பின்னர் தனது 85 ஆவது வயதில் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக் கிறார். உலகளாவிய ரீதியில் பாப்பரசர் மீது சுமத்தப்பட்டிருக்கும் பாரிய சுமைகள் ,சவால்களை எதிர்கொள்வது தொடர்பான நலிந்த தன்மை என்பவையே அவரை இராஜினாமா செய்வதற்கான தீர்மானத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றன. ஆயினும் பாப்பரசரின் இந்தத் தீர்மானம் மேன்மையானதும், சுய நலமற்றதாகவுமே பரவலாக நோக்கப்படுகிறது.


பாப்பரசரின் சமயப் பணியானது ஞானம், இறைவனுக்கான அர்ப்பணம் அடிப்ப டைக் கோட்பாடுகளை நடைமுறைப் படுத்துதல் என்பவற்றை ஒன்று சேர்ந்ததாக உள்ளது. ஆயினும் இந்த விடயங்கள் தொடர்பான ஆற்றலை சோதிக்கும் மலை யளவு சோதனைகளை எதிர்கொண்டு திருச்சபையை சமூகத்திற்கும் வாழ்வுக்கும் இடையில் தொடர்புத்தன்மையைப் பேணி முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையிலேயே பாப்பரசர் பதவி விலகுகிறார். அவருக்குப் பின் அடுத்த பாப்பரசராக பதவியேற்பவருக்குப்பாரிய பொறுப்புகள் காத்திருக்கின்றன. முதல் தடவையாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த ஒருவரையே அடுத்த பாப்பரசராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்துகள் மேலெழுந்து வந்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பாக் கண்டமானது தற்போது அதிகளவுக்கு மதச் சார்பற்ற தன்மையே நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் நிலையில், விவிலிய வேதப் பிரசாரத்தை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று ஆசீர்வாதப்பர் கூறியிருந்தார். அவரின் இலக்கு இதுவாக இருந்தால் திருச்சபையானது அதிகளவுக்கு உலகளாவிய ரீதியில் வியாபகமெடுக்க வேண்டிய தேவை இருப்பதாக வத்திக்கான் அதிகாரிகள் கூறுகின் றனர். அதேசமயம்,அடுத்த பாப்பரசர் ஐரோப்பவைச் சாராதவராக இருக்கவேண்டும். என்று அண்மையில வத்திக்கானைச் சேர்ந்த இரு சிரேஷ்ட அதிகாரிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

மறைநூல் பேராசிரியரான ஆசீவாதப்பர் பாப்பரசருக்குரிய கடமை, பொறுப்ப களின் கனதியை நன்கு உணர்ந்திருப்பதாலேயே வெளியேறத் தீர்மானித்திருப்பதாகவும் இதனாலேயே தனது வெளியேற்றமானது திருச்சபயின் நலன்களுக்கு சிறப்பானது என்ற கருத்தை அவர் வெளிப்படுத்தக் காரணமாக அமைந்தது என்றும் கூறப்படுகிறது. ஜேர்மனியரான ஆசீர்வாதப்பர் குறிப்பிட்ட சுமையை காவிச் செல்வது தொடர்பான பிரக்ஞை கொண்டவராகவே எப்போதும் இருந்துள்ளார்.

இந்த உணர்வே அவரின் பிந்திய வாழ்வில் கலாசாரத்துடன் தொடர்புபட்ட நலன்கள் பற்றி அவர் அதிகளவுக்கு கவனத்தைச் செலுத்தக் காரணமாக இருந்திருக்கக் கூடும். 2010 இல் அவர் எதிர்பாராத விதமாக பிரிட்டனுக்கு விஜயம் மேற் கொண்டிருந்தார். இங்கிலந்தின் திருச்சபையுடன் அவர் தொடர்பாடல்களை மேற்கொள்ள விரும்பியிருந் ததை இது வெளிப்படுத்தியிருந்ததுடன் அவரின் மிதவாதத் தன்மையையும், அறிவு ஞானத்தையும் சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் கல்விமானாகவும் கெடுபிடி யுத்த காலத்தில் மேற்கு ஜேர்மனியின் மதகுருவாகவுமிருந்த ஆசீர்வாதப்பர் கோட் பாட்டு ரீதியான பழமைபேணும் வாதம் என்ற அடிப்படைத் தன்மையை அதிகளவுக்கு உள்ளீர்த்துக் கொண்டிருந்தார். இந்த விடயத்தில் இவருக்கு முன்னர் பாப்பரசராக விளங்கிய இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை விட அதிகளவுக்கு ஆசீர்வாதப்பர் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். திருமணம் செய்தவர்கள் மதகுருவாக வருவதற் கான கடும் எதிர்ப்பு, பெண்கள் மதகுருவாக திருநிலைப்படுத்தப்படுதல், ஒரே பால் திருமணம், செயற்கை குடும்பக்கட்டுப்பாடு போன்ற விடயங்களில் திருச்சபை தொடர்ந் தும் உறுதியான கொள்கையுடனேயே இருந்து வருகிறது. ஆசீர்வாதப்பருக்குப் பின்னர் புதிய பாப்பரசராகப் பதவியேற்பவர் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டி யுள்ளது. புதிய நூற்றாண்டுக்கு ஏற்புடையதாகக் கத்தோலிக்கத்தைக் கொண்டு வருவதற்கான தலைமைத்துவ ஆற்றலும் தொலை நோக்கும் வரவிருக்கும் புதிய பாப்பரசருக்கு சவால்கள் காணப்படுகின்றன.

ஒரு வருடத்திற்கு முன்பாக இத்தாலியைச் சேர்ந்த பல கர்தினால்களை நியமித் திருந்தார். அதன் பின்னர் நவம்பரில் இத்தாலியைச் சாராதவர்களைக் கர்தினால்களாக நியமித்து குறைபாடுகளை நீக்கிருந்தார். புதிய பாப்பரசரை தெரிவு செய்யும் அசாதா ரணமான சூழ்நிலை ஆசீர்வாதப்பர் உயிருடன் இருக்கும் போதே உருவாகியுள்ளது. வாக்கெடுப்பு தொடர்பாக கர்தினால்களுடன் ஆசீர்வாதப்பர் ஆராயப் போவதில்லை யாயினும் இந்த விடயத்தில் ஆசீர்வாதப்பரின் பிரசன்னத்தை அதிகளவுக்குக் கொண்ட தாகவே இருக்கும். **உயிர்வாழும் போதே பதவியைத் துறப்பதற்கான ஆசீர்வாதப்பரின் தீர்மானம் வரலாற்று ஏட்டில் அழியாத இடத்தைப் பிடித்துக் கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை** ஆனாலும், அவரின் 8 வருட பதவிக் காலத்தில் கத்தோலிக்க திருச்சபை யானது கோட்பாட்டு ரீதியில் கேள்விகளை ஏற்படுத்தும் பாரியதொரு மாற்றம் எதனையுமே உள்வாங்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும் 266 ஆவது பரிசுத்த பாப்பர சராகத் தெரிவு செய்யப்படும் 21 ஆம் நூற்றாண்டின் யதார்த்தத்திற்குப் பொருத்தப்பாடா னவராக இருப்பதற்கு ஆசீர்வாதப்பர் வழியமைத்துக் கொடுத்திருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை.

**நன்றி : தினக்குரல்**



# Hai குட்டீஸ்

இது உங்களுக்கான பகுதி......

## விவிலியப் புதிர் போட்டி எண் - 2

## தொடக்க நூல் 12-22ம் அதிகாரங்கள்

1. 'உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்குச் செல்'' யார் யாருக்குக் கூறியது?

   **விடை:-** ........................................................................................

2. சோதோமின் மக்கள் யாருக்கு எதிரான மிகக் கொடிய பாவிகளாக இருந்தனர்?

   **விடை:-** ........................................................................................

3. யார் இழைக்கும் தீமை இன்னும் முழுமை அடையவில்லை என்று ஆண்டவர் ஆபிராமிடம் கூறினார்?

   **விடை:-** ........................................................................................

4. அம்மோனியரின் தந்தை யார்?

   **விடை:-** ........................................................................................

5. ஆண்டவர் ஆபிரகாமுக்கு எந்த இடத்தில் எந்த மரத்தருகில் தோன்றினார்?

   **விடை:-** ........................................................................................

6. ஆகார் தன்னுடன் பேசிய கடவுளுக்கு என்ன பெயரிட்டு அழைத்தார்? அந்த இடத்திலிருந்த கிணற்றின் பெயர் என்ன?

   **விடை:-** ........................................................................................

7. பெண் ஆட்டுக்குட்டிகள் எதற்குச் சான்றாக அளிக்கப்பட்டன?

   விடை:- ........................................................................................

8. மலையில் ஆண்டவர் பார்த்துக்கொள்வார் என்று கூறப்படும் மலைக்கு ஆபிரகாம் இட்ட பெயர் என்ன?

   விடை:- ........................................................................................

9. ஆபிரகாம் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டதை ஆண்டவர் என்னவாக கருதினார்?

   விடை:- ........................................................................................

10. லோத்து தப்பிச் சென்று சேர்ந்த நகரின் பெயர் என்ன?

    விடை:- ........................................................................................

### விவிலியப் புதிர் போட்டி எண் - 1 இன் விடைகள்

1. 73 புத்தகங்கள்
2. 46 புத்தகங்கள்
3. 27 புத்தகங்கள்
4. மண்ணால் ஆனவன் (தொ.நூல் 2:7)
5. பீசோன், கீகோன், திக்ரீசு, யூப்பிரத்தீசு (தொ.நூ. 2:11,13,14)
6. திருமணம் (மெய்விவாகம்)
7. 800 ஆண்டுகள் (தொ.நூல் 5:4)
8. "ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடின வேலையிலும், உழைப்பிலும் நமக்கு ஆறுதல் அளிப்பான்" (தொ.நூ5:29)
9. கோபர் (தொ.நூ6:14)
10. நீளம்: 300 முழம், அகலம்: 50 முழம், உயரம்: 30முழம்(தொ.நூ.6:15)
11. 600 (தொ.நூ.6:6)
12. "ஆண்டவர் அவர்களை அங்கிருந்து உலகம் முழுவதிலும் சிதறுண்டு போகச் செய்ததால் அவர்கள் நகரைத் தொடர்ந்து கட்டுவதைக் கைவிட்டனர்".(தொ.நூல்:11:8)
13. வில் (தொ.நூல் 9:13)
14. காயீன் (தொ.நூல் 4:12)
15. இலாமேக்கு / ஆதாம் வழிமரபினர் (தொ.நூல் 5:28)

**பதில்கள் அனுப்ப வேண்டிய கடைசி நாள் : 20.05.2013**
**விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.**
**உங்களுக்குரிய பரிசுகளை உங்கள் பங்குத் தந்தையிடம் பெற்றுக்கொள்ளுங்கள்**

**அனுப்ப வேண்டிய முகவரி**
விவிலியப் புதிர் போட்டி எண் -2
ஆசிரியர்,
திருமலைத் தீபம்,
இல:297,டொக்கியாட் விதி,
திருகோணமலை.



| 1ம் பரிசு 300/= ரூபாய் | 2ம் பரிசு 200/= ரூபாய் | 3ம் பரிசு 100/= ரூபாய் |
| --- | --- | --- |
| செல்வி அ. டிலானி<br>இல:20 கோணேசபுரம்,<br>உவர்மலை,<br>திருகோணமலை. | செல்வி ஆர். அஸ்லினா எல்டன்<br>இல:12, முதல் தெரு,<br>பாரதிபுரம், அன்புவழிபுரம்,<br>திருகோணமலை. | செல்வி நேமிநாதன் என்சியா<br>5ம் வட்டாரம்,<br>கும்புறுப்பிட்டி, நிலாவெளி,<br>திருகோணமலை. |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மாபெரும் தவக்கால ஆராதனை



திருகோணமலை மறைமாவட்டத்தில் 'தவக்கால நற்செய்தி அறிவிப்பு மனமாற்ற பெருவிழா" மார்ச் மாதம் 13ம் திகதி இறை யிரக்கத் திருத்தலத்தில் நடைபெற்றது. திருகோணமலை மறைமாவட்ட அருங் கொடைப் பணியின் இயக்குனர் அருட்பணி S.மதுராங்கன் குரூஸ் நிகழ்ச்சிகளை ஒழுங் குபடுத்த அருட்தந்தையர்களான R. திருச் செல்வம், யூட்சர்வானந்தன் வழிபாடுகளை நடாத்தினார்கள்

13ம் திகதி மாலை 5.00 மணிக்குத் தொடங் கிய இந்த மாபெரும் ஆராதனை 9.00 மணிக்கு நிறைவடைந்தது. மறைமாவட்ட ஆயர் அதி.வந். கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை ஆராதனைகளில் கலந்து கொண்டு சிறப்பு செய்தியையும் வழங்கியமையும் குறிப்பித்தக்கது. **மேலும் 18.03.2013 அன்று பெந்தக்கோஸ்தே திருவிழிப்பு ஆராதனை குவாடலூப்பே திருத்தலத்தில் மாலை 6.00 தொடக்கம் இரவு 11 மணிவரை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.**

**தகவல் : கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம், திருகோணமலை.**



## குருக்களுக்கான வருடாந்த தியானம்

இவ் வருடம் மாசி மாதம் திருமலை மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம் கண்டி, கலஹா வில் நடைபெற்றது. வழி நடத்தியவர் Fr. வஜிர (T.O.R). குருக்களின் பணி சிறக்க தீபம் வாழ்த்துகிறது.

## பேராலய பங்கில் தவக்கால விசேஷ வழிபாடு



தூய மரியாள் பேராலயத்தில் கடந்த 22.02.2013 - 25.02.2013 வரையான நான்கு நாட்கள் விஷேட நற்செய்தி அறிவிப்பும், உள் மனக்காயமாற்றும் (Inner Healing) வழிபாடும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதனை சகோதரர் வி.நி.கிசோக் குழுவினர் நெறிப்படுத்தினர்.

**திருமதி ஆ.சுப்பிரமணியம் – பேராலயம்.**

## Congrats/வாழ்த்துக்கள்

### இருதயபுரம் புதிய பங்காகிறது



திருமலை மறைமாவட்டத்தில் மூதூர் பங்கின் கிளைப் பங்காக இருந்து வந்த இருதயபுரம் (பச்சனூர் கிராமம்) புதிய பங்காக சென்ற மாதம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பங்குத்தந்தை, பங்கு மக்கள் அனைவரையும் தீபம் வாழ்த்துகின்றது.

## பாராட்டும் நன்றி நவில்தலும்



திருகோணமலை மறைமாவட்டத்தில் 14-10-2003 முதல் 27-02-2013 வரை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தில் ஒன்பதரை வருட காலமாக இயக்குனராக பணியாற்றிய அருட்பணி பிரான்சிஸ் சேவியர் டயஸ் அடிகளார் அவர்களுக்கு, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மற்றும் குருக்கள், அருட்சகோதர சகோதரிகள், பொதுநிலையினர் முன்னிலையில் புதிய எகெட் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி க.நிதிதாசன் மற்றும் எகெட் கரித்தாஸ் பணியாளர்கள் தலைமையில், பிரியாவிடை நிகழ்வு புதிய கட்டடமான **'தீபம்"** வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**திருமதி ஜே. ஜெனட்,**
**எகெட் கரித்தாஸ்,**

## எகெட் கரித்தாசினால் புதிய கட்டடம் 'தீபம்' 08-02-2013ல் திறப்பு



எகெட் கரித்தாஸ் (திருகோணமலை) நிறுவனத்தின் புதிய கட்டடம் 08-02-2013 அன்று மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களாலும் எகெட் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி பிரான்சிஸ் சேவியர் டயஸ் அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தினை சாதகமான தொகையினூடாகப் பயன்பெற திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்துடன் தொடர்புகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

## திருமலைத் தீபம் வெளியிடப்பட்டது



திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டமானது தனி மறை மாவட்டங்களான பின்பு திருகோணமலை மறைமாவட்டத்திற்கு என்று **திருமலைத்தீபம்** எனும் சஞ்சிகை 24.02.2013 அன்று முதன் முதலாக அருட்பணி மதுராங்கன் குரூஸ் தலைமையில் தூய குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் எமது முதல் மாத இதழ்களை ஆயரின் பிரதி நிதி அருட்பணி C. நோயல் இம்மானுவேல் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து குருமுதல்வர் அருட்பணி T.கிங்சிலி றொபட்,மற்றும் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்கனர் அருட்பணி G.நிதிதாசன் அவர்களுக்கும் பொதுநிலையினர் சார்பாக தூய குவாடலூப்பே அன்னை திருத்தல பங்குச் சபைச் செயலாளர் S.தினேஸ்குமார் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இப்பத்திரிகை திருமலையில் உள்ள மறைக்கல்வி நடுநிலையத்தில் வடிவமைக்கப்பட்டு திருகோணமலை அஸ்ரா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடட் இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org